தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre Homebush Inc.**
PO Box 4032, Homebush, NSW 2140.
www.tsch.org.au
homebushtsch@gmail.com

## பேச்சுப் போட்டி 2025 ஆண்டு 6

அனைவருக்கும் வணக்கம்

### ஓருமைப்பாடு

எமது உறவு நிலைகள் குடும்பம், சமூகம், நாடு, உலகம் என்று விரிவடைந்து செல்கின்றன. இந்த உறவு நிலைகளுக்கிடையே ஒருமைப்பாடு, முரண்பாடு என்ற இரு தன்மைகளால் சாதக பாதக நிலைமைகள் ஏற்படுகின்றன. ஒருமைப்பாடு இல்லாத இடத்தில் வாக்குவாதங்கள், சண்டைகள், போர் என்று முரண்பாட்டின் வடிவம் விரிவடைந்து செல்கிறது. இன்று நாம் வீடுகளிலும் சமூகங்களிலும் நாடுகளிலும் இத்தகைய தன்மையைக் காண்கிறோம்.

ஒற்றுமை, சமாதானம், பரஸ்பர உறவுநிலை என்பன உலக நாடுகளிடையே பேணப்படவேண்டும். இதை யார் ஏற்படுத்துவது? உலக சமாதானம், ஓருமைப்பாடு என்பன நிலவவேண்டும் என்று நினைக்கும் குடிமக்கள் ஆரம்பத்தில் இருந்தே அதனைக் கடைப்பிடிக்கவேண்டும்.

எல்லாக் குடும்பங்களிலும் கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், சகோதர சகோதரிகள், நெருங்கிய உறவினர்கள் ஆகியோரிடையே உண்மையான அன்பு, மதிப்பு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பகிர்ந்து வாழும் தன்மை என்பன இருந்தால், தொடர்ந்து வரும் சமூகமும் நாடும் உலகமும் சமாதானம், ஒற்றுமை என்பவற்றை அனுபவிக்க முடியும்.

எனவே தேசிய ஒற்றுமை உருவாகி உலகம் சுபீட்சம் பெறக் குடும்பம் என்ற பூங்காவில் அன்பு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பகிர்ந்து வாழும் பண்பு போன்ற ஆரோக்கியத் தென்றல் வீசவேண்டும் என்பதை உணர்ந்து வாழ்வோம்.

நன்றி

வணக்கம்